தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 9, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஜூலை 25, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதி நூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான டாக்டர் து. திருமூர்த்தி அவர்கள் 23-7-2014 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

டாக்டர் து. திருமூர்த்தி அவர்கள் 1989 முதல் 1991 வரை திருப்போரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

255—

துணை மின் நிலையம்

36849—திரு. ப. டில்லி பாபு:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, சித்தேரி மலைப் பகுதியில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சித்தேரி மலைப் பகுதிக்கு தற்போது 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரூர் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சித்தேரி மலைப் பகுதிக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் கீரைப்பட்டி பகுதியில் உள்ள வள்ளிமதுரை கிராமத்தில் புதிதாக 8 எம்.வி.த. திறன் கொண்ட மின்மாற்றியுடன் கூடிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க 12-வது ஐந்தாண்டுத் திட்டக்